உ

கடவுள் துணை.

# முருகர்

# முத்துப்பாட்டு.

இவை-செஞ்சி

ஏகாம்பரமுதலியாராலியற்றியதை.

இஃது.

மயிலை.

வைதிலிங்கசுவாமிகளால்

பரிசோதிக்கலுற்று.

சிட்டத்தூர்

செங்கல்வராயமுதலியாரது

சென்னை.

சிற்றம்பலவிலாசம்பிரேஸ்ஸிற்

பதிப்பிக்கப்பட்டது.

1901.

உ

கடவுள்துணை.

# முருகர்முத்துப்பாட்டு.

## விநாயகர்துதி.

### வெண்பா.

மாயவலைபறுக்கும் மருபிறவிவாராதடுக்கும்
நேயமுளமுத்துவிற்கும் நேர்மையைக்கேள் காமுற
அத்தனருளத்திமுகன் ஐயன்திருவடியை
நித்தம்நித்தம் நெஞ்சே நினை

### சிந்து

கனகரஞ்சிதக் கண்ணேமுத்து
காசினியோர் புகழுமுத்து
வனமையிலே வாங்குமுத்து
வஞ்சிக்கேற்ற கெட்டிமுத்து (கனக)

கொத்துசரங் கோர்வைமுத்து
குமரவே ளணியுமுத்து
பத்தினிமார்ப் பூணுமுத்து
படிகம்போல துலங்குமுத்து (கனக)

டீக்காவுக் கானமுத்து
தெய்வானை யணியுமுத்து
பார்க்கஜொலிக்கும் பச்சைமுத்து
பைங்கிளியே வாங்குமுத்து (கனக)

மோகமதை யறுக்குமுத்து
முகஜம்புலுக் கேற்றமுத்து
சோகமான சிகப்புமுத்து
சுப்பிரமணிய ரணியுமுத்து (கனக)

நத்துக்கேற்ற கெட்டிமுத்து
நாணயத்தைக் கொடுக்குமுத்து
உத்தமியே யுனக்குகேற்ற
ஒளிதருகும் பேசாமுத்து (கனக)

பச்சைமுத்து பவழமுத்து
பார்வதியா லீன்றமுத்து
இச்சையான வேலன்முத்து
யேந்திழையே வாங்குமுத்து (கனக)

கண்டசர மானமுத்து
கன்னியற்கு யேற்றமுத்து
தொண்டரெலாம் புகழுமுத்து
துணையுனக்கு வானமுத்து (கனக)

மங்கையர்கள் மகிழுமுத்து
மயிர்மாட்டிக் கேற்றமுத்து
செங்கையிலே வாங்குமுத்து
செந்திற்பதி யானமுத்து (சனக)

வள்ளியற்கு யேற்றமுத்து
வாமிசுத னானமுத்து
தெள்ளுமணி யென்கைமுத்து
தேன்மொழியே வாங்குமுத்து (கனக)

இந்திராதி வானவரும்
இமையோர் புகழுமுத்து
சுந்திரரானமுத்து
சூரர்குலங் காய்ந்தமுத்து (கனக)

செங்கண்மால் மருகன்முத்து
சேவற்கொடி பூண்டமுத்து
மங்களமா யென்கைமுத்து
மான்மகளுக் கேற்றமுத்து (கனக)

ஆரமாய்ப் பூணுமுத்து
ஆறுமுக மானமுத்து
காரானை மாமுகற்கு
கன்னிபரே பிள்ளையமுத்து (கனக)

தெய்வானை பணியுமுத்து
தேசமெங்கும் நிறைந்தமுத்து
தைபல்வள்ளி யுனக்குயேற்ற
தகுதியான பெண்கைமுத்து (கனக)

சொட்டைமுத்து சிப்பிமுத்து
சொகுசுதரும் பவழமுத்து
கெட்டிமுத்து நீலமுத்து
கழுத்துக்கேற்ற கோர்வைமுத்து (கனக)

நாணய மானமுத்து
நாட்டிற் சிறந்தமுத்து
மோனமுத லானமுத்து
முத்திதருஞ்சோதிமுத்து (கனக)

கன்னலைப்போல்மின்னுமுத்து
காமனை யறுக்குமுத்து
அன்னநடை வள்ளிபரே
ஆசைக்கேத்த வழகுமுத்து (கனக)

பார்த்தோர் மழுங்குமுத்து
பாரேழும் நிறைந்தமுத்து
கோர்த்த சரமானமுத்து
கோகிலமே வாங்குமுத்து (கனக)

பொய்கையிலே பூர்த்தமுத்து
பார்வதியாளெடுத்தமுத்து
வையமெங்கும் புகழுமுத்து
வள்ளிபெண்ணே வாங்குமுத்து (கனக)

மூக்குக்கேற்ற புலாக்குமுத்து
முகத்துக்கேற்ற வழகுமுத்து
பார்க்கப்பார்க்கப் பவழமுத்து
பட்சமுருகு மென்கைமுத்து (கனக)

காதுக்கேற்ற ஜிமிக்கைமுத்து
கர்னப்பூவுக் கேற்றமுத்து
சோதியாகுங் கொப்புக்கேற்ற
சின்னசரங் கெட்டிமுத்து (கனக)

போரூரமர்ந்தமுத்து
பழனிமலை யானமுத்து
கோரும்வரங் கொடுக்குமுத்து
குமரகுரு வானமுத்து (கனக)

புள்ளிமயி லேறுமுத்து
பாவைவள்ளிக் கேற்றமுத்து
உள்ளமது மகிழுமுத்து
உனக்குமேற்ற கந்தன்முத்து (கனக)

குறமகளுக் கேற்றமுத்து
கோரும்வரங் கொடுக்குமுத்து
அரிமருகனான முத்து
அகத்தியர்க் கருளுமுத்து (கனக)

செஞ்சி யேகாம்பரமும்
செப்பமுருகர் முத்துப்பாட்டை
அஞ்சலில்லாமலதை
அகிலமெல்லாந் தானறிய (கனக)

முருகர்முத்துப்பாட்டு

முற்றிற்று.